

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, இராமநாதபுரம் 80 அடி சாலை, கோவை மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் மு.மா.ச அறக்கட்டளை மற்றும் KMCH மருத்துவ கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்திய மாபெரும் இலவச பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாமை, தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்.வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக் தொ.அ.ரவி . பொதுக் குழு உறுப்பினர் மு.மா.ச.முருகன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன் பகுதி கழகச் செயலாளர் ப.பசுபதி ஏர்போர்ட் ராஜேந்தர் நாகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும்

# நீர் மோர் பந்தல் அமைத்து பொது மக்களுக்கு உதவிட வேண்டும்!

### மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ..வேண்டுகோள்!



மயிலாடுதுறை, ஏப். 9 -

கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கு இணங்க மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் நீர் மோர் பந்தல் அமைத்து பொது மக்களுக்கு உதவிட மயிலாடுதுறை மாவட்டச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாட்டில் கோடை காலம் தொடங்கி வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. வரும் நாட்களில் இன்னும் அதிகமாக வாய்ப்புள்ளதாக வானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கொளுத்தும் கோடை வெய்யிலில் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் ஆங்காங்கே நீர் மோர் பந்தல்கள்அமைத்திட கழகத் தலைவர்-முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய ,நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டுகள் மக்கள் அதிகம் கூடும் இடங்கள், பேருந்து நிறுத்தங்களில் நீர், மோர் பந்தல் அமைத்து பொதுமக்களின் தாகத்தை தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்திட வேண்டும். ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சிறப்பாக செய்திட வேண்டும் . மேலும் நீர் மேர் பந்தலை கழகத்தினர், சார்பு அணியினர் , உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், நகர் மன்ற, பேரூராசி மன்ற பிரதிநிதிகள் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களிடம் கலந்து பேசி செய்திடலாம் என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மயிலாடு துறை மாவட்டச் செயலாளர் - பூம்புகார் சட்டமன்ற உறுப்பின் நிவேதா எம்.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

# அறந்தாங்கியில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி - மில்டன்- சொ.தமிழினியன் கண்டன உரை!

புதுக்கோட்டை, ஏப். 9 -

இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி திமுக இளைஞரணி சார்பில் பொதுக்கூட்டம் அறந்தாங்கி வ.உ.சி. திடலில் 29.03.2025 சனிக்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் த.மணி ராஜன் வரவேற்றார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இரா. தமிழ்ராசு, முகமது ரபிக், சே.அருண்குமார், கங்கை கவிக்குமார், இளையராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சிறப்பு பேச்சாளர்கள் ஊடகவியலாளர் மில்டன், கழக இளம் பேச்சாளர் சோ.தமிழினியன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் சக்திராமசாமி, பொன்கணேசன், பொன்துரை, அறந்தாங்கி நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் மிசா.இராமநாதன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே.கலைமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் க.அடைக்கலம், ஞான. இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் வீரையா, மாவட்ட அணி அமைப்பாளர்கள் தி.முத்து, விமலாதி ராஜன், சக்திவேல், பழனியப்பன், பாத்திமா பீவி, தகவல் தொழில்நுட்ப அணிதொகுதி ஒருங்கிணைப்பாளர் அறந்தாங்கி செந்தில்வேலன், ஒன்றிய,நகர இளைஞரணி அமைப்பாளர்கள் பி. இஸ்மாயில், எஸ் ஐயப்பன், மாரிமுத்து,பிரபுராமன்,சுரேஷ், பிரசாத், சி.அகிலன், முகமது இம்தியாஸ், ராஜாராம், விக்னேஸ்வரன், வீரத்துரை, கண்ணதாசன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கட்சி முன்னோடிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் நசுருதீன் நன்றி கூறினார்.

### பொள்ளாச்சி - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில்

# அணுகல் (சர்வீஸ்) சாலைகள் இல்லாததால் விவசாய விளைப் பொருட்களை கொண்டு செல்வதில் சிக்கல்!

### உரிய நடவடிக்கை எடுக்க மக்களவையில் க.ஈஸ்வரசாமி வலியுறுத்தல்!



பொள்ளாச்சி, ஏப். 9 -

மக்களவையில் க.ஈஸ்வரசாமி பேசியதாவது :

பொள்ளாச்சியிலிருந்து திண்டுக்கல் கமலாபுரம் வரையிலான தேசிய நெடுஞ்சாலை எண் 209 இல் புளியம்பட்டி, கிட்டாசுரம்பாளையம், குரும்பபாளையம், ஆச்சிப்பட்டி வழியாக அமைக்கப்படுகிறது. சுமார் 136 கிலோ மீட்டர் தூரத்திற்கு நெடுஞ்சாலை 20 அடி உயரத்திற்கு மேல் அமைக்கப்பட்டு வருவதால், மீதமுள்ள விவசாய நிலங்களுக்கு செல்ல முடியாத நிலை உள்ளது. இந்த திட்டத்திற்காக நிலம் வழங்கிய விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அணுகல் (சர்வீஸ்) சாலைகள் இல்லாததால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தங்கள் விவசாய நிலங்களிலிருந்து விளைப் பொருட்களை கொண்டு செல்ல முடியாமல் தவிக்கின்றனர். எனவே அனைத்து கிராமவாசிகள் சார்பாக நெடுஞ்சாலை போக்குவரத்துக்கும், விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கும் எந்த சிரமமும் இல்லாமல் உதவ, நெடுஞ்சாலையின் இருபுறமும் SVUP (112+980 KM) TO LVUP (114+095 KM) அசல் தரை மட்டத்தில் பிட்மினஸ் தார் சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

கூடுதலாக, இந்தப் பகுதி பொள்ளாச்சி நகராட்சிக்கு மிக அருகில் உள்ளது மற்றும் நகராட்சி விரிவாக்கத்திற்கான மாதிரி பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. வேகமாக வளர்ந்து வரும் இந்த கிராமங்களுக்கு முறையான அணுகல் சாலை தேவைப்படுவதால், விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு உதவ, நெடுஞ்சாலையின் இருபுறமும் அசல் தரை மட்டத்தில் தார் சாலைகள் அமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் கிட்டாசுரம்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகே இலகுரக வாகனங்களின் போக்குவரத்தை எளிதாக்க நிரந்தர சாய்வுதளம் அமைத்திடவும், பொள்ளாச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் மரப்பேட்டை முதல் ஊஞ்சவேலம்பட்டி வரை பிரதான சாலைக்கும் சர்வீஸ் ரோட்டிற்கும் இடையே உள்ள தடுப்பு கம்பிகள் அதாவது மீடியன் உள்ளது, இதனால் பல விபத்துகள் ஏற்ப்பட்டு பலர் உயிரிழந்துள்ளனர். எனவே அதை அங்கிருந்து எடுக்க வேண்டும். மேலும் மடத்துக்குளம் அருகே உள்ள வேடபட்டி கிராமத்திற்கு செல்வதற்கு மேம்பாலம் அல்லது கீழ்பாலம் அமைக்காத காரணத்தினால் மேற்படி கிரா மத்துக்கு செல்ல முடியாமல் அந்த கிராமம் தீவாக மாறி உள்ளது. மேலும் பாலப்பம்பட்டி ராஜாவூர் பிரிவில் ரவுண்டானா உடனடியாக அமைக்க வேண்டும் என்று பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி வலியுறுத்தியுள்ளார்.

### காரைக்கால் மாநிலம் - தஞ்சாவூர் மத்திய மாவட்ட பொறியாளர் அணி

# மாநகர் / நகர / ஒன்றிய / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

### மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

கீழ்க்காணும் அட்டவணைப்படி நடைபெறும்.

நாள் : 10.04.2025 (வியாழக்கிழமை)
நேரம் : மாலை 5.00 மணிக்கு
இடம் : ஹோட்டல் அட்லாண்டா (பேருந்து நிலையம் அருகில்) காரைக்கால்.
தலைமை : ஏ.எம்.ஹச் நாஜிம் எம் எல் ஏ, மாநில அமைப்பாளர் காரைக்கால்.

நாள் : 13.04.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணிக்கு
இடம் : மாவட்ட தி.மு.க. அலுவலகம் அண்ணா அறிவாலயம், தஞ்சாவூர்
தலைமை : துரை சந்திரசேகரன் எம் எல் ஏ, மாவட்ட கழக செயலாளர், தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.

மாநகர்/நகர /ஒன்றிய /பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

# தமிழ்நாடு ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

## 10 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் ரவி அனுப்பியது சட்டவிரோதம்!

புதுடெல்லி, ஏப். 9 -



தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி நிறுத்தி வைத்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தது சட்ட விரோதம் என்றும் ஆளுநரின் இந்த நடவடிக்கைகளை ரத்து செய்வதாகவும் உச்சநீதிமன்றம் அதிரடியாக தீர்ப்பளித் துள்ளது. ஆளுநர் ஆர். என்.ரவியின் செயல்பாடுகள் நேர்மையானதாக இல்லை; அரசியல் அமைப்பின் நோக்கத்துக்கு விரோதமாக இருக்கிறது என்றும் உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்தது. தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் கிடப்பில் போடுவது, துணைவேந்தர்கள் நியமனத்தில் குறுக்கீடு உள்ளிட்டவைகளை முன்வைத்து இந்த வழக்குகள் தொடரப்பட்டன.

உச்சநீதிமன்றத்தில் நீதிபதி பர்திவாலா, மகாதேவன் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் இந்த வழக்கை விசாரித்தது. இந்த வழக்கு விசாரணையின் போது ஆளுநர் ஆர். என்.ரவிக்கு உச்சநீதிமன்றம் கெடு விதித்தது; கண்டனங்கள் தெரிவித்தது. மேலும், மாநில சட்டசபை நிறைவேற்றும் மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்பினால், மசோதாவை மீண்டும்சட்டசபையில்நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பும் போது, ஜனாதிபதிக்கு அனுப்ப அதிகாரம் இருக்கிறதா? மாநில அரசின் அதிகாரத்தின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட மசோதாக்களை மட்டுமே அனுப்ப முடியுமா? அனைத்து மசோதாக்களையும் ஜனாதிபதிக்கு பரிந்துரைக்க இயலுமா? என்பது உள்ளிட்ட பல கேள்விகளை எழுப்பி இருந்தது உச்சநீதிமன்றம். இந்த நிலையில் நேற்று ஆளுநருக்கு எதிரான வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்றத்தின் நேற்றைய தீர்ப்பின் முக்கிய அம்சங்கள்.

ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள் நேர்மையானதாக இல்லை.

ஆளுநர் ஆர்.என்.ரவியின் நடவடிக்கைகள் அரசியல் சாசனத்துக்கு விரோதமானதாக இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களை நிறுத்தி வைத்து ஜனாதிபதிக்கு ஆளுநர் அனுப்பி வைத்தது சட்ட விரோதம்.

தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களை ஆளுநர் ஆர்.என்.ரவி நிறுத்தி வைத்த நடவடிக்கைகள் ரத்து செய்யப்படுகின்றன. தமிழ்நாடு அரசு 2வது முறையாக நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்திருக்க வேண்டும். தமிழ்நாடு அரசின் மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒரு மாத காலத்துக்குள் ஒப்புதல் தர வேண்டும். ஆளுநருக்கு அரசியல் சாசனத்தின் 200 வது பிரிவின் படி சுயேட்சையாக செயல்பட அதிகாரம் உள்ளதா? அல்லது மாநில அமைச்சரவையின் முடிவுக்கு கட்டுப்பட்டவரா? என்பது குறித்து முடிவு எடுக்க வேண்டும். மாநில அரசின் ஆலோசனைப்படியே ஆளுநர் செயல்பட வேண்டும்

தமிழக அரசின் மசோதாக்கள் சிலவற்றுக்கு 3 வாரத்திலும் மற்றவைகளுக்கு ஒரு மாதத்திலும் ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் தர வேண்டும். ஆளுநர் ரவிக்கு காலக்கெடு நிர்ணயிக்கவே முடியாது; நிர்பந்திக்க முடியாது என்ற ஒன்றிய அரசின் வாதத்தை உச்சநீதிமன்றம் நிராகரித்தது.

# தேசியத் தலைவர் தளபதி



திராவிட முன்னேற்றக் கழகம் மாநிலக் கட்சி என்றாலும் அது தேவைப்படும்போது தேசிய அளவில் குரல் கொடுக்க என்றுமே தயங்கியது கிடையாது.தேசிய பிரச்சனைகளுக்கும் மாநிலப் பிரச்சனைகளுக்கு உள்ள அதே அக்கறையை தளபதி காட்ட என்றுமே தவறியதில்லை. அதற்கு உதாரணம் வக்பு வாரிய சட்ட திருத்தம். மதவாத சக்தியான பாரதிய ஜனதா முஸ்லிம்களுக்கு எதிராக கொண்டு வந்த வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கடுமையாக விமர்சனம் செய்தது இல்லாமல் இந்த சட்ட திருத்தத்தை எதிர்த்து வாக்களித்தார்கள். அது போதாது என்று நாடாளுமன்றத்தில் அந்த சட்ட திருத்தம்நிறைவேறிய மறுநாளேஅந்த சட்ட திருத்தத்தை எதிர்த்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.அன்றைய தினம் தளபதி உட்பட திமுக சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லோரும் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்ய கருப்பு பேட்ஜ் அணிந்து கொண்டு சட்ட சபைக்கு வந்தார்கள். இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்கு ஆதரவான குரலாக தளபதி அன்றும் இருந்தார் இன்றும்இருக்கிறார், எதிர்காலத்திலும் இருப்பார்.

திமுகவின் மொழி உணர்வு கட்சி தொடங்கிய காலத்தில் இருந்தே இருக்கிறது. தாய் மொழிக்கு தளபதியின் குரல் தாக்கம் இன்று மகாராஷ்டிராவில் எதிரொலிக்கிறது. மராத்தியில் தான் எல்லோரும் பேச வேண்டும் என்ற குரல் இப்போது அங்கே ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது.இதற்கு அவர்கள் உதாரணம் காட்டுவது தளபதியின் மொழி உணர்வைத்தான். தேசிய அளவில் அன்றும் இன்றும் திமுக பேசும் பொருள்தான். அதைத்தான் தளபதி இன்றும் சொல்கிறார்.

நிதி ஒதுக்கீடிலும் அரசு கொள்கைகளின் மீதான தங்கள் செல்வாக்கில் நாங்கள் வஞ்சிக்கப்படுகிறோம் என்று மதவாத பாஜக அரசுக்கு எதிராக முதலில் குரல் கொடுத்தவர் தளபதி தான். இப்போது மற்ற மாநிலங்களும் தளபதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் குரல் கொடுக்கத் தொடங்கி இருக்கின்றன. தளபதியின் தேசியப் பார்வைக்கு இது ஒரு உதாரணம். கூட்டாட்சி, பொருளாதாரம் ஏற்றத் தாழ்வு, அரசியல் அதிகாரம் ஆகியவற்றுக்கு பாஜக அரசால் ஏற்படும் அச்சுறுத்தல்களை தளபதி தேசிய அளவில் கொண்டு செல்வதால் தான் பாரதப் பிரதமர், உள்துறை அமைச்சர், நிதி அமைச்சர் உள்ளூர் பாஜக தலைவர்கள் என்று எல்லோரும் தளபதியை விமர்சனம் செய்கிறார்கள். மக்களைப் பொய் என்ற மாய வலையில் வைத்திருந்த பாஜக அரசின் பொய்களை உரக்கச் சொல்லி தேசிய அளவில் தளபதி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார் என்ற கோபம் தான் அவர்கள் செயலில் தெரிகிறது.



**எஸ். ரகுபதி**
சட்ட அமைச்சர்

மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு தொடர்பான பிரச்சனை தேசிய அளவில் கொண்டு வந்து எந்தெந்த மாநிலங்கள் பாதிக்கப்படும் என்ற ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன் பாதிக்கப்படும் மாநிலங்களை ஒன்றிணைந்து மத்திய ஒன்றிய அரசை எதிர்த்து அவர்கள் குரலை ஒன்றிணைத்ததில்தளபதியின் பங்கு மகத்தானது. மறுசீரமைப்பு என்பது நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதாக இருக்க வேண்டும் என்று எல்லோரையும் ஒரே குரலில் பேச வைத்திருக்கிறார் தளபதி. அரசியல் அதிகாரம் இதன் மூலம் மத்தியில் குவியும்என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலையில் தளபதி தீவிரம் காட்கிறார். தளபதியின் குரலுக்கு பிறகு தான் மற்ற மாநிலங்களும் விழித்துக் கொண்டு குரல் தரத் தொடங்கி இருக்கின்றன. தேசிய பிரச்சனையை தேசிய அளவில் கொண்டு செல்வதில் தளபதியின் பங்கு அலாதியானது. இது மத்திய, மாநில உறவுகளை மேலும் சீர்குலைக்கும் என்பதுதான் தளபதியின் குரலாக ஒலிக்கிறது. தென் மாநிலங்களின் அதிகாரத்தை குறைத்து அரசியல் செல்வாக்கு வட மாநிலங்களை நோக்கி நகரும் என்ற விழிப்புணர்வை எல்லா மாநிலங்களுக்கும் குரலாக தளபதி பேசுகிறார் என்று அச்சம் தான் பாஜகவின் முகத்தில் தெரிகிறது.ஆனால், அது பற்றியெல்லாம் கவலைப்படாமல் தளபதி தொடர்ந்து தேசியத்திற்கான குரலாக இன்றும் ஒலிக்கிறார்.

மக்கள் தொகை அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறு வரை செய்யப்பட்டால் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்கள் பாதிக்கப்படும் என்று அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து கூட்டம் கூட்டினார் தளபதி. கேரள முதல்வர், தெலுங்கானா முதல்வர், பஞ்சாப் முதல்வர், கர்நாடக துணை முதல்வர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களும் மற்ற கட்சிகளின் பிரதிநிதிகள் என25 பேர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.ஒடிசா முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் காணொளி மூலம் அந்த கூட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார். ஆந்திரம் முன்னாள் முதல் ஜெகன்மோகன் ஆதரவு கடிதம் அனுப்பினார்.அந்தக் கூட்டத்தில்கலந்து கொண்டவர்கள்பெயர்கள்ஆங்கிலத்திலும்அவர்கள் தாய் மொழியிலும்அவர்கள் அமர்ந்த இருக்கையில் எழுதப்பட்டிருந்தது.

அதுமட்டுமல்ல; தளபதியின் உரை ஆங்கிலத்திலும் அந்தந்த தலைவர்களின் தாய் மொழியிலும் மொழிபெயர்த்து அந்த நகல் அந்த தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. அதுமட்டுமில்ல தளபதி பேசும் போதே அவரது பேச்சை அந்தந்த தலைவர்கள் அவர்கள் தாய் மொழியில் கேட்கும் அளவுக்கு மொழிபெயர்ப்பு வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அந்த கூட்டத்தில். இப்படி தேசிய அளவில் பாரதிய ஜனதா அரசின் அதிகார மீறலை தட்டிக் கேட்கும் குரலாக தேசிய அளவில் தளபதி பேசப்படுகிறார் என்பதால் தான் பாரதிய ஜனதா பயப்படுகிறது.

கூட்டத்தில் கலந்து கொண்ட மாநிலத் தலைவர்கள் மாநில உணர்வை எந்த அளவுக்கு தளபதி மதிக்கிறார் என்பதை பார்த்து வியந்து போய் பாராட்டினார்கள் தொகுதி மறு வரை செய்யும்போது மோடி எந்த மாநிலங்களும் பாதிக்க முடியாதபடி செய்ய வேண்டும் என்ற அச்ச உணர்வை பிரதமருக்கு தளபதி ஏற்படுத்தியிருக்கிறார். இப்போதைக்கு வரை அவர்கள் ஏனோ தானோ என்று அவர்கள் எண்ணப்படி செய்ய முடியாது அந்த பயம் பாஜகவின் பேச்சில் தெரிகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு தளபதியின் பிறந்தநாள் கூட்டத்தில் கலந்து கொண்ட காஷ்மீர் முன்னாள் முதல்வர் ஃபருக் அப்துல்லா தேசிய அரசியலுக்கு வர வேண்டுமென்றார்.அந்த கூட்டத்துக்கு முன்னால் நிருபர்க ளிடம் பேசிய ஃபருக் அப்துல்லா ஏன் ஸ்டாலின் பிரதமராக கூடாது. அவர் அந்த பதவிக்கு தகுதியானவர் தான் என்றார். அதே கூட்டத்தில் கலந்து கொண்ட அன்றைய பீகார்துணை முதல்வர் தேஜஸ்வியாதவ்ஸ்டாலின் தேசிய அரசியலுக்கு வர வேண்டும் என்றார்.

அந்த கூட்டத்தில் பேசிய சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவும் அதே கருத்தை சொன்னார். ஆனால் இந்த தேசியத் தலைவர்களின் இந்த கருத்துக்குதளபதி அந்த பிறந்த நாள் மேடையில் பதில் சொல்லவில்லை.

மறுதினம் தனது ட்விட்டர் பக்கத்தில் ‘தேசிய அரசியலில் நான் ஏற்கனவே இருக்கிறேன்’ என்று பதில் சொன்னார்.அது தான் உண்மை.பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முதலில் அறிவித்தது தளபதி தான். தளபதி தேசிய அளவில் எந்த பதவிக்கும் என்றுமே ஆசைப்பட்டதில்லை. அது அவர் விருப்பமும் இல்லை. அவரது குரல் தேசம் சார்ந்தது. எனவே பதவி ஆசை அவருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. தி.மு.க.வின் தேசிய பார்வை என்பது ஆணித்தரமானது. அதன் குரல் எல்லோருக்குமாக அன்றும் இன்றும் என்றும் ஒலிக்கும் அதை தான் தளபதி இன்றும் செய்கிறார்.